## தலைப்பு 256 – கம்பஹா மாவட்ட செயலகம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

தலைப்பு 256 – கம்பஹா மாவட்ட செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பஹா மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் தொடர்பான பொழிப்பு அறிக்கை 2024 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பஹா மாவட்ட செயலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

கம்பஹா மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பஹா மாவட்ட செயலகத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பஹா மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.
தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உபபிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபுர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து

பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் உள்ளகக் கட்டுப்பாட்டிலான முக்கியமான பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிற்கு நேரொத்ததாக தயாரிக்கப்பட்டன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட எனது அறிக்கையின் 5.1(இ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது குறை மதிப்பீடு தயாரிக்கப்பட்ட காரணத்தால் 10 செலவின விடயங்களுக்காக நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ரூபா 74,250,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் குறை நிரப்பு மதிப்பீட்டின் கீழ் 04 செலவின விடயங்களுக்காக ரூபா 423,953,000 தொகையான மேலதிக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கொடுப்பனவுகளுக்கான மதிப்பிடப்பட்ட தொகையின் ஒரு பகுதியானது சம்பள மதிப்பீட்டில் பிழையாக சேர்க்கப்பட்டுள்ளதால் கொடுப்பனவுகளுக்கு கூடுதல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கட்டிட நிர்மாணம் மற்றும் நெல் கொள்வனவு திட்டத்திற்கான குறைநிரப்பு மதிப்பீடுகளின் கீழ் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. | முடிந்தவரை துல்லியமான மற்றும் முழுமையான மதிப்பீடுகளைத் தயாரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 02 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாடும் எஞ்சியிருந்தது. இந்த 02 செலவின விடயங்களுக்காக 2022 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 450,000 தொகையான நிதியேற்பாட்டு தொகை முழுமையாக எஞ்சியுள்ள போது மீண்டும் 2023 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2023 ஆம் ஆண்டில் பதிவழிப்புகளுக்காக ஒதுக்கீடுகள் செய்யப்பட்ட போதிலும், 1701 செலவினப் விடயத்தின் கீழ் எந்தக் பதிவழிப்பும் அறிக்கையிடப்படாமையால் இவ்வாறு நிதியேற்பாடு எஞ்சியுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஓய்வு பெற்ற, மரணம் அடைந்த, பணி வறிதாக்கப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் இடர் கடன் மற்றும் ஏனைய கடனாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக 01 முதல் 20 வருடங்கள் வரையான காலப்பகுதியில் முன் கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 3,555,331 தொகையான கடன் மீதி ஒன்று நிலவியது. | 2024 ஆம் ஆண்டில் ரூபா 1,359,860 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், மேலும் ரூபா 2,223,750 அறவிடுவதற்காக எஞ்சியுள்ளது. அந்த மீதியையும் 2024 ஆம் ஆண்டின் இறுதிக்கு முன்னர் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | மீளப்பெறக்கூடிய மாற்று நடவடிக்கைகள் மூலம் கடன் நிலுவைகளை மீளப்பெறுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.2 ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்தல்.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மரணம் குறித்த அறிவிப்பில் தாமதம், ஓய்வூதிய சுற்றறிக்கைகளை கடைபிடிக்காமை மற்றும் பிற காரணங்களால் கம்பஹா மாவட்டத்திலுள்ள 13 பிரதேச செயலகங்களும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருந்த 419 ஓய்வூதியர்களுக்கு மொத்தமாக ரூபா 40,518,538 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | 2024 நவம்பர் 30 ஆந் திகதிக்கு முன்பாகவோ அல்லது சம்பந்தப்பட்ட தரப்பினருக்குத் தெரிவித்து அறவிடுதல் மூலம் அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | அதிக கட்டணம் செலுத்திய தொகையை உடனடியாக வசூலிக்க வேண்டும். |
| (ஆ) | 20 அமைச்சுகள் 25 திணைக்களங்கள் ஆகியவற்றில் இருந்து மீளாய்வாண்டின் இறுதி அளவில் ரூபா 5,068,206,349 கூட்டுத் தொகையான நிதியேற்பாடு கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அவற்றுள் ரூபா 4,763,327,502 பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 304,878,847 தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 03 நிறுவனங்களைத் தவிர, மற்ற நிறுவனங்களில் ஒதுக்கீடுகளின் பயன்பாடு திருப்திகரமான அளவில் பராமரிக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | செயற்திட்டத்தின் விரும்பிய நோக்கங்களை அடையும் வகையில் ஒதுக்கீடு பயன்படுத்தப்பட வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பாவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| (i) VII ஆம் அத்தியாயத்தின் 12.2.3 ஆம் பிரிவு | நிரந்தர நியமனம் வழங்கப்படும் வரை ஒரு தற்காலிக மாற்றீடாகவே பதில் கடமை நியமனம் வழங்கப்படலாம் என்ற போதிலும், கம்பஹா மாவட்டத்திலுள்ள 13 பிரதேச செயலகங்களில் 261 கிராம உத்தியோகத்தர்கள் 01 மாதங்களிலிருந்து 10 ஆண்டுகள் வரையான காலம் பதில் கடமை மேற்கொண்டிருந்தனர். | வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை நியமிக்குமாறு பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை தயவு செய்து அறியத்தருகின்றோம். | தாபனவிதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) xxiv ஆம் அத்தியாயத்தின் 3.6 ஆம் பிரிவு | இடர் கடன் அறவிடும் போது அறவிடப்பட வேண்டிய கடன் தவணையை மாதாந்த சம்பளத்தின் 10 சதவீதமாக கணிப்பிடப்பட வேண்டிய போதிலும் கட்டான பிரதேச செயலகத்தின் 05 உத்தியோகத்தர்களின் கடன் தவணைகள் ரூபா 3750 ஆக அறவிடப்பட்ட காரணத்தால் மாதம் ஒன்றுக்கு ரூபா 7377 இனால் குறைத்து அறவிடப்பட்டிருந்தது. | தாபன விதி கோவையின் பிரிவுகளின் பிரகாரம் கடன் தவணை அறவிடுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நிதிப் பிரமாணம் 1646 | குறித்த மாதம் நிறைவடைந்து 15 நாட்கள் நிறைவடைவதற்கு முன்னர் மாதாந்த ஓட்ட பொழிப்புகள் தயாரிக்கப்பட்டு, | உரிய கெப் வண்டியின் மாதாந்த ஓட்ட குறிப்புகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு | நிதிப்பிரமாண கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீரிகம பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளருக்கு ஒதுக்கப்பட்ட கேப் வண்டியின் மாதாந்த ஓட்ட குறிப்புகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை . | சமர்ப்பிக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2014 ஒக்தோபர் 16 ஆந் திகதிய 2014/04 ஆம் இலக்க ஓய்வூதியத் திணைக்களச் சுற்றறிக்கை | ஓய்வூதியம் செலுத்தும் ஓய்வூதியர்களின் ஓய்வூதியக் கோப்பு 90 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட நிறுவனத்திலிருந்து பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்படாத சந்தர்ப்பங்களில், கொடுப்பனவுகளை இடைநிறுத்தி ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும், ஆனால் வழங்கப்படாத 97 கோப்புகள் தொடர்பாக ஓய்வூதிய கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்பட்டு 90 நாட்களுக்குள் 13 பிரதேச செயலகத்திற்கு அது வழங்கப்படவில்லை. | கோப்புகள் எந்த அலுவலகங்களுக்குச் சொந்தமானது என்பது குறித்து அறிவிக்கப்பட்டு, அந்தக் கோப்பு உரிய மத்தியப்படுத்தப்பட்ட தரவுக் கட்டமைப்பில் கொண்டுவரப்பட்டு புதுப்பிக்கப்படும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 06/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | ஓய்வூதிய கோவை இல்லாது இருந்தமை, ஓய்வூதிய சம்பள பரிமாற்றம் பெற்றுக் கொள்ளப்பட்டிராமை போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 பிரகாரம் ஓய்வூதியம் திருத்தப்படாத கோவைகளின் எண்ணிக்கை 242 ஆகும். | பொது நிர்வாக சுற்றறிக்கை 06/2006 இன் பிரகாரம் தற்காலிக கோவைகள் என்பதுடன் அவற்றின் தகவல்கள் போதுமானதாக இல்லாத ,ருந்த காரணத்தால் திருத்துவதற்கு முடியாது உள்ளது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2016 சனவரி 12 ஆந் திகதிய 1/2010 ஆம் இலக்க சமூக வலுப்படுத்தல் மற்றும் நலன்புரி அமைச்சின் சுற்றிக்கையின் 7.3 ஆம் பிரிவு | ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 ஆம் திகதிக்குள் பயனாளிகள் மீள் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற போதிலும், அத்தனகல்ல பிரதேச செயலகத்தினால் பல வருடங்களாக முதியோர் கொடுப்பனவுப் பயனாளிகளின் கணக்கெடுப்பு நடாத்தப்படவில்லை. | முதியோர் உதவித்தொகை அட்டை 03 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தப்பட்டு, கணக்கெடுப்பு நடத்துவதற்கு பொதுச்செயலாளர் அலுவலகம் வழங்கிய அறிவுறுத்தல்களின்படி, கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | -மேற்படி- |
| (ஊ) | 2022 செப்தம்பர் 14 ஆந் திகதிய 02/2022 ஆந் திகதிய பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை | துப்பாக்கி உரிமம் புதுப்பித்தலில் தொடர்ந்தும் துப்பாக்கி தேவை இருப்பதை உறுதி செய்வதற்காக உரிய விவசாய நிலங்கள், கால்நடை பண்ணைகள், இருப்பு தாள்கள் அல்லது சான்றளிக்கப்பட்ட பத்திரங்கள் போன்றவற்றின் நகல்களை பெற வேண்டியிருந்த போதிலும், களனி பிரதேச செயலகம் அவ்வாறு செய்யவில்லை. | 2024 ஆம் ஆண்டிலிருந்து துப்பாக்கி அனுமதிப் பத்திரத்தை புதுப்பிப்பதில் இன்னும் துப்பாக்கி தேவையுள்ளது என்பதை உறுதிப்படுத்தி, துப்பாக்கி அனுமதிப் பத்திரத்தை புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு களனி பிரதேச செயலாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (எ) | 2021 மார்ச் 23 ஆந் திகதிய 5/2021 ஆந் திகதிய உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ நில செவன அலுவலகங்களை நிர்மாணிப்பதில் மாவட்ட செயலாளர் அல்லது பிரதேச செயலாளருக்கு சொந்தமான அரச காணியில் நிர்மாணிக்கப்பட வேண்டும் என்றாலும், தொம்பே பிரதேச செயலகத்தின் 03 உத்தியோகபூர்வ நில செவன அலுவலகங்கள் தனியாரால் வழங்கப்பட்ட காணிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள போதிலும், குறித்த காணிகளை அரசாங்கத்திற்கு சுவீகரிக்கப்படவில்லை. | உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 5/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி, உத்தியோகபூர்வ நில செவன அலுவலகங்களை நிர்மாணிக்கும் போது, அது மாவட்ட செயலாளர் அல்லது பிரதேச செயலாளருக்கு சொந்தமான அரசாங்க நிலத்தில் கட்டப்பட வேண்டும், ஆனால் அலுவலகங்கள் கட்டுவதற்கு பொருத்தமான நிலங்கள் இல்லாததால், உத்தியோகபூர்வ நில செவன அலுவலகங்கள் தனிநபர்கள் வழங்கிய நிலத்தில் கட்டப்பட்டன. | -மேற்படி- |

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசகள் |
|---|---|---|---|
| (அ) | 2016 ஜனவரி 12 ஆம் திகதிய 1/2010 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் முதியோர்களுக்கான படிகள் ஒவ்வொரு மாதத்தினதும் 15 ஆம் திகதியின் பின்னரான 07 வேலை நாட்களினுள் தபால்/உப தபால் அலுவலகம் மற்றும் திவி நெகும வங்கியின் மூலம் மாத்திரம் செலுத்தப்பட முடியுமான போதிலும், அத்தனகல்ல பிரதேச செயலகத்தின் 2022 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்திற்கான முதியோர் கொடுப்பனவு நலனாளிகள் 503 பேருக்கு உரித்துடைய ரூபா 955,700 தொகையான முதியோர் படி நலன்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. திசெம்பர் மாதத்தின் இறுதியில் எஞ்சியிருந்த இந்த பணம் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு தீர்க்கப்படாது அந்தத் பணத்தில் ரூபா 782,800 தொகை அங்கீகாரம் இல்லாது, மீண்டும் சிராப்பரின் ஊடாக 2023 ஜனவரி மாதத்தில் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | அனைத்து பயனாளிகளும் விழிப்புணர்வுடன் இருக்க போதிய கால அவகாசம் இல்லாததாலும், தபால் நிலையங்கள் குறிப்பிட்ட நாட்களுக்கு பணம் கொடுப்பதாலும், ஏராளமானோர் பணம் பெற முடியாமல் தவித்தமையால், செலுத்தப்படாத தொகைகள் பிரதேச செயலகங்கள் ஊடாக செலுத்தப்பட்டன. எதிர்காலத்தில் இவ்வாறான கொடுப்பனவுகள் சுற்றறிக்கைகளுக்கு அமைவாகவே வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அத்தனகல்ல பிரதேச செயலகத்தின் 2023 ஜுலை மாதத்திற்கான முதியோர் கொடுப்பனவு காத்திருப்புப் பட்டியலின்படி, பெம்முல்ல தபால் நிலையத்தினால் வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ரூபா 100,000 முதியோர் கொடுப்பனவானது தபால் நிலையத்தின் ஊடாக வழங்கப்படாமல் கிராம உத்தியோகத்தர் ஊடாக முதியோர் கொடுப்பனவின் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. | முதியோர் காத்திருப்போர் பட்டியலுக்கு அடையாள அட்டை இல்லாமல் பணம் செலுத்த முடியாது என வாய்மொழியாக தெரிவித்து பெம்முல்லா தபால் நிலையம் பணம் செலுத்த மறுத்துவிட்டது. உரிய பலனை வழங்கும் நோக்கில் பிரதேச செயலாளரின் எழுத்துமூல அனுமதி பெற்று கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக உரிய தொகை செலுத்தப்பட்டுள்ளது. | -மேற்படி- |

### 2.5 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஜுலை 15 ஆம் திகதி மஹர பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பெட்டகத்திலிருந்து பணம் காணாமல் போனமை தொடர்பில் நிதிப்பிரமாணம் 104(4) இன்படி நடைபெற்ற இறுதி விசாரணை அறிக்கையின்படி, 04 அதிகாரிகளிடமிருந்தும் ரூபா 270,561 சமமாகப் பெறப்பட வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டது. 2020 செப்டெம்பர் 22 ஆம் திகதி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் கடிதத்திலிருந்து உரிய சேகரிப்புக்கான பரிந்துரை மற்றும் அங்கீகாரம் மற்றும் இழப்பை மீட்பதற்காக 2023 நவம்பர் 23 திகதிய பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் நட்டத்தை வசூலிப்பதற்கான உத்தரவு பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் அரசுக்கு ஏற்ப்ட நட்டமான ரூபா 1,082,245 மோசடிக்கு காரணமான தரப்பினரிடமிருந்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் அறவிடப்பட வேண்டும் என கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அத்திகதியில் ரூபா 42,275 மட்டுமே வசூலிக்கப்பட்டிருந்தது. | 2014 ஆம் ஆண்டு மஹர பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பண மோசடி தொடர்பில் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய நட்டத்தின் ரூபா 42,275 பெறப்பட்டுள்ளதுடன், உரிய அதிகாரிகள் மற்றும் அவர்கள் பணிபுரியும் நிறுவனங்களுக்கு எஞ்சிய தொகையை அறவிடுதல் தொடர்பில் தொடர்ச்சியான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. | நட்டத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், வசூலிக்க நடவடிக்கை எடுக்காமைக்கு பொறுப்பான அதிகாரிகள் மீது நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மினுவாங்கொடை பிரதேச செயலகத்தினால் 2011 பெப்ரவரி 10 முதல் 2013 ஜுலை வரையான காலப்பகுதியில் பெறப்பட்ட செலுத்தப்படாத பொது உதவித் தொகை ரூபா 1,441,400 பெண் உத்தியோகத்ததர் ஒருவரால் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் 104(4) அறிக்கையின் பிரகாரம் அதே தொகை மற்றும் 2 சதவீதம் மிகைக் கட்டணம் அறவிடுமாறு பிரதம செயலாளரின் 2021 யூலை | மேல் மாகாண பிரதம செயலாளரின் இலக்க் CSWP/ADM/09-34/F1/101 மற்றும் 2021 ஜுலை 26 திகதிய கடிதத்தின் படி, ரூபா 1,470,268 தொகையை 03 சம தவணைகளில் வசூலிக்க வேண்டும் என முன்னாள் மாவட்ட செயலாளரின் இலக்கம் கம்/மாசெ./5/மினு/முவா மற்றும் 2021 ஆகஸ்ட் 06 ஆந் திகதிய | மேல் மாகாண பிரதம செயலாளரின் இல. WP/ADM/09-34/F1/101 மற்றும் 2021 ஜுலை 26 ஆந் திகதிய கடிதத்தின் படி ரூபா 1,470,268 தொகையை 03 சம தவணைகளில் வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 26 ஆந் திகதிய கடிதத்தின் படி அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தாலும், 2023 நவம்பர் 08 ஆந் திகதி வரை ரூபா 84,840 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. | கடிதம் பிரதேச செயலாளர் ஜா-எலவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பெண் உத்தியோகத்தர் தற்போது ஓய்வு பெற்றுவிட்டார். முழுப் பணிக்கொடையும் ஈடுசெய்யப்பட்டாலும் கூடுதலான பணம் மிச்சமாகும் என்பதால், ஒவ்வொரு மாதமும் ஓய்வூதியத்திலிருந்து ரூபா 20,000 பெறுவதற்கு ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திடம் அனுமதி கோருவதற்கு ஜா-எல பிரதேச செயலாளர் ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் 2024 பெப்ரவரி 09 ஆம் திகதி கம்பஹா மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, ஓய்வூதியத்தைப் பெறுவதற்காக பண மோசடியின் மொத்த நஷ்டத்தையும் ஓய்வூதியதாரருக்கு வழங்குவதற்குத் தெரிவிக்க தீர்மானிக்கப்பட்டது. அதன்படி மேலதிக பணிகள் மேற்கொள்ளப்படும். | |
| (இ) | கம்பஹா பிரதேச செயலகத்தின் ஓய்வூதியம் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் ஒருவரின் ஓய்வூதியம் மற்றும் அவருக்கு உரித்துடைய விதவைகள் மற்றும் தபுதாரர் ஓய்வூதிய தொகை அந்த ஓய்வூதியதாரர் மரணம் அடைந்த பின்னர் 05 வருடம் காலத்திற்கு ரூபா 2,696,304 தொகை செலுத்தப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டிருந்தது. ஓய்வூதிய சுற்றறிக்கை இலக்கம் 09/2014 இன் மூலம் வாழ்வாதார சான்றிதழ் ஒன்றினை பெற்றுக் கொள்ளாது ஓய்வூதியதாரரின் ஓய்வூதியத்தை தற்காலிகமாக இடை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால் ஓய்வூதிய நலனாளிகளின் வாழ்வாதார சான்றிதழ் வழங்கப்பட்டிருக்காத போது 2013 | அதிக பணம் செலுத்தியமை கண்டறியப்பட்டவுடன், கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டது மற்றும் ரூபா 2,696,303 அதிகமாக செலுத்தப்பட்ட தொகையிலிருந்து ரூபா 250,000 தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தற்போது நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளது. | பணத்தை எடுத்தவர்களிடம் இருந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ஓய்வூதியம் முறையற்ற வீதத்தில் செலுத்தப்பட்டிருந்தது.

**2.6 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 இன் படி மாவட்ட செயலகத்தின் 03 பொது வைப்புக் கணக்குகளில் ரூபா 180,353,859 காலாவதியான நிலுவைகள் இருந்த போதிலும், அந்த நிலுவைகளை நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அரச வருமானத்திற்கு எடுத்துச் செல்வதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. | இழப்பீட்டுத் தொகையைத் தீர்ப்பதற்கு ஒரு சிறப்புத் திட்டம் பயன்படுத்தப்பட்டது, மேலும் இந்தத் தொகையானது அதிவேக நெடுஞ்சாலைகளுக்கான கையகப்படுத்துதலின் கீழ் போதுமான இழப்பீடு இல்லாததால் பெறப்படாத இழப்பீட்டுத் தொகையைக் குறிக்கிறது. எவ்வாறாயினும், இந்த வைப்பு நிலுவைகளை 2024 ஆம் ஆண்டில் முடிந்தவரை தீர்ப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்த்த பூர்த்தி மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சௌபாக்கியா உற்பத்தி கிராமங்கள் 2021 திட்டத்தின் கீழ், மினுவாங்கொடை பிரதேச செயலகத்தின் யாகொடமுல்ல வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் இனிப்புகள் தொடர்பான உற்பத்தி கிராமங்கள் திட்டத்தின் கீழ் 14 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,015,380 பெறுமதியான உபகரணங்கள் செயலற்றுக் காணப்பட்டன. | தற்போது இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், பொருத்தமான வேறு பயனாளிக்கு பொருட்களை அனுப்புவதற்கு தகவல் தேடப்பட்டு வருவதாகவும். | வழங்கப்பட்ட உபகரணங்கள் திட்டத்தின் நோக்கங்களை அடைய திறம்பட பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீரிகம பிரதேச செயலகப் பிரிவில் ரூபா 8,202,635 செலவில் நிர்மாணிக்கப்பட்ட 10 சேவை பியச கட்டிடங்கள் பகுதியளவு நிறைவ செய்யப்பட்டு பயன்படுத்தப்படாமல் உள்ளன. | அனைத்து சேவை பியச மற்றும் நில செவன் அலுவலகங்களின் குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதற்கான மதிப்பீடுகள் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட முன்மொழிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். | கட்டுமானத்தினை நிறைவு செய்து நிலத்தை ஆக்கபூர்வமான பணிகளுக்காக பயன்படுத்த வேண்டும். |
| (இ) | திவுலப்பிட்டி பிரதேச செயலகத்தின் சௌபாக்கியா உற்பத்தி கிராம வேலைத்திட்டத்தின் கீழ் புடவைக் கைத்தொழில் கிராம திட்டத்தின் மூலம் 12 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 840,000 பெறுமதியான உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றன. | பயனாளிகளில் 7 பேர் செயலில் உள்ள நிலையை அடைந்துள்ளனர். பயனாளிகளின் பயன்படுத்தப்படாத உபகரணங்களை பொருத்தமான மற்றொரு பயனாளிக்கு மாற்ற ஏற்பாடு செய்யப்படும். | வழங்கப்பட்ட உபகரணங்கள் திட்டத்தின் நோக்கங்களை அடைய திறம்பட பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | திவுலப்பிட்டி பிரதேச செயலகத்தின் புடவைக் கைத்தொழில் திட்டத்தின் கீழ் தலா ரூபா 100,000 பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட 08 பணிமனைகள் 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் வரையிலும் மூடப்பட்டு விளைவற்றுக் காணப்பட்டன. | சௌபாக்யா உற்பத்தி கிராம ஒப்பந்தத்தின் பிரிவு 3.4 இன் படி, வழங்கப்பட்ட ரூபா 100,000 தொகை திரும்பப் பெறப்படும் என்று பயனாளிகளுக்கு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | -மேற்படி- |
| (உ) | பியகம பிரதேச செயலகத்தில் சௌபாக்ய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டம்-2021 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட ரூபா 7,437,250 பூஜை பொருட்கள் உற்பத்தித் திட்டத்திற்காக 13 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 139,000 பெறுமதியான மெழுகுவர்த்தி அச்சுக்கள் பயன்படுத்தப்படவில்லை. | சௌபாக்ய பூஜை தயாரிப்பு கிராமம் திட்டத்தின் கீழ் மெழுகுவர்த்தி உற்பத்திக்கான உபகரணங்கள் வழங்கப்பட்ட பயனாளிகளுக்கு பார.்.பின் மெழுகு கிடைக்காததால் மெழுகுவர்த்தி உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. | பயன்படுத்தப்படாத உபகரணங்களைப் பயன்படுத்தி திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 எதிர்பார்த்த நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சௌபாக்கியா உற்பத்தி கிராமத் திட்டத்தின் 2021 ஆம் ஆண்டு கம்பஹா பிரதேச செயலகத்தினால் மகோவிட பிரதேசத்தில் 06 விற்பனை நிலையங்களுக்கான கட்டிடம் ரூபா 1,875,525 செலவில் கட்டப்பட்ட கட்டிடம் மற்றும் ரூபா 150,188 செலவில் கட்டப்பட்ட உபகரணங்களை சேமித்து வைக்கவும் கட்டப்பட்ட கட்டிடம் மரக்கட்டைகளை வெட்டவும் பயன்படும் வகையில் கட்டி முடிக்கப்படாததால் பணம் செலவழிக்கப்பட்டதற்கான பலன்கள் இதுவரை கிடைக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில், பன்முகப்படுத்தப்பட்ட ஒதுக்கீடாக ரூபா 1,500,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்த கட்டிடம் தொடர்பான கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. | உடன்படிக்கை காலத்தினுள் செயல் திட்டத்தினை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

### 3.3. செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாது கைவிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டு கிராமத்துடனான உரையாடல் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் தொம்பே பிரதேச செயலகத்தின் மூலம் ரூபா 19,880,000 தொகைக்காக உத்தேச செயலத்திட்டங்கள் 19 நடைமுறைப்படுத்தப்பட்டு ரூபா 8,465,314 செலவினம் மேற்கொள்ளப்பட்டு செயற்த்திட்டங்கள் இடை நடுவே நிறுத்தப்பட்டிருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட செலவினம் விளைவற்ற செலவினமாக மாறி இருந்தது. | எதிர்வரும் ஆண்டில் செயற்திட்டங்களைக் கண்டறியும் போது, பாதியில் நிறுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து, அந்தத் செயற்திட்டங்களின் பணிகளை நிறைவு செய்ய வேண்டும். | ஒப்புக்கொண்ட காலத்திற்குள் செயற்திட்டத்தை நிறைவு செய்ய வேண்டும். |
| (ஆ) | திவுலபிட்டிய பிரதேச செயலகத்திற்குட்பட்ட கொஸ்கொடமுல்ல கிராமத்தின் சமூக மண்டபத்திற்கு பல்நோக்கு கட்டிடமாக புதிய பகுதியை சேர்க்கும் பணி ரூபா 1,200,000 மதிப்பீட்டில் 2022 மார்ச் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, ரூபா 401,229 செலவிடப்பட்ட பின்னர் கட்டுமானப் பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டிருந்தன. | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் 2024 இன் கீழ் பணியை முடிக்க ரூபா 500,000 அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்தின் 95A – கழுவாரிப்புவ வடக்கு சன சமூக நிலையத்திற்கு ஒரு பகுதியை சேர்த்து சேவ பியச நிலையம் ஒன்றாக அபிவிருத்தி செய்யும் பணி ரூபா 1,200,000 மதிப்பீட்டின் அடிப்படையில் 2022 பிப்ரவரி 03 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு ரூபா 298,958 செலவினம் மேற்கொள்ளப்பட்ட பின்னர் இடை நடுவே நிறுத்தப்பட்டிருந்தது. | பின்னர் செயல்திட்டத்தின் எஞ்சிய பகுதியை அபிவிருத்தி செய்வதற்காக பன்முகப்படுத்த பாதீட்டு நிகழ்ச்சி திட்டம் 2024 இன் கீழ் ரூபா 500,000 தொகை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | வத்தளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஹொரப்பே ஸ்ரீ சுதர்சன்னாராம ஆலயத்துடன் இணைந்ததாக 2017 ஆம் ஆண்டில் பிராந்திய அபிவிருத்தி அமைச்சினால் பெறப்பட்ட ரூபா 5,000,000 தொகையில் ரூபா 4,125,198 செலவில் கட்டப்பட்ட பல்நோக்குக் கட்டிடம் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் இறுதி வரையிலும் சுத்திகரிப்பு வசதியின்மை மற்றும் மின்சாரம் மற்றும் நீர் விநியோகம் பெற்றுக்கொள்ளப்பட்டிராமை ஆகிய காரணங்களால் விளைவற்றுக் காணப்பட்டது. | சுத்திகரிப்பு வசதிகள் இல்லாததாலும், பிரதான கதவு பொருத்தப்படாமையாலும் தற்போது பயன்பாட்டில் இல்லை. எதிர்காலத்தில் நிதி ஏற்பாடுகளைப் பெற்று அது தொடர்பான குறைபாடுகளை நிவர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. | -மேற்படி- |
| (உ) | கட்டான பிரதேச செயலகத்தின் சௌபாக்கிய உற்பத்தி கிராம உட்கட்டமைப்பு வசதிகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தையல் தொழிலில் ஈடுபட்டுள்ள நலனாளிகளுக்கு தமது விற்பனைகளை மேற்கொள்வதற்காக, சந்தைகளை நடத்துதல், பயிற்சி பாடநெறிகளை நடத்துதல் ஆகியவற்றுக்காக வடக்கு உதம்மிட கிராம உத்தியோகத்தர் பிரிவில் ரூபா 2,903,497 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு ,ருந்த தன சமூக கட்டிடத்தின் நிர்மாண பணிகள் நிறைவு செய்யப்பட்டு செயற்திட்டத்தின் உத்தேச நோக்கத்தினை நிறைவேற்றிக் | 2022 ஏப்ரல் 26 ஆந் திகதி வெளியிடப்பட்ட தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை எண். 03/2022 இன் படி, செயற்திட்டங்களை செயல்படுத்த முடியவில்லை. 2024 ஆம் ஆண்டில் அதற்கான ஏற்பாடுகள் கிடைக்கப்பெற்று மேலதிக பணிகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | வத்தளை பிரதேச செயலகத்தின் நுகப்பே இறங்குதுறை வீதிக்கு அருகே அமைந்துள்ள சேவா பியச மேல் மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சின் மூலம் கிடைத்திருந்த ரூபா 500,000 தொகையான நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் ரூபா 400,000 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டு பிரதானமான கான்கிரீட் தூண்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள போதிலும் சுவர்கள் எழுப்பப்பட்டு நிர்மாணம் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்காத காரணத்தால் செலவிடப்பட்ட தொகை விளைவற்ற செலவினமாக மாறி இருந்தது. | 2024 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடுகளைப் பெற்று அது தொடர்பான குறைபாடுகளை நிவர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. | செயற்திட்டத்தை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |
| (எ) | ஜா-அல பிரதேச செயலகத்தின் சௌபாக்கியா உற்பத்தி கிராம வேலைத்திட்டத்தின் கீழ் 03 உற்பத்தி கிராமங்கள் இயங்கி வந்தன. அந்த திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூபா 41,759,385 ஆகும், அதில் ரூபா 22,938,385 மட்டுமே செலவிடப்பட்டுள்ளது மற்றும் உற்பத்தி கிராமத்தின் 10 பயனாளிகள் வருமானம் ஈட்ட முடியவில்லை. விதை மற்றும் நடவுப் பொருள் உற்பத்தி கிராமத் திட்டத்துக்கான உபகரணங்கள் வழங்கப்பட்ட 10 பயனாளிகள், காளான் உற்பத்தி கிராமத் திட்டத்திற்கு உபகரணங்கள் வழங்கப்பட்ட 10 பயனாளிகள், அலங்கார மீன் வளர்ப்புக்கான உபகரணங்கள் வழங்கப்பட்ட 11 பயனாளிகள் வழங்கிய உபகரணங்களை பயன்படுத்தாமல் இருப்பது அவதானிக்கப்பட்டது. | 26 பயனாளிகளைத் தவிர, மீதமுள்ள 139 பேர் இந்தத் நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். | வழங்கப்பட்ட உபகரணங்களை செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைய திறம்பட பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | மஹர பிரதேச செயலகத்தின் படஹேன வீதி பெங்கு வத்த சனசமூக மண்டபம், ரூபா 442,700 செலவில் 2018 ஆம் ஆண்டு அத்திவாரம் மற்றும் தூண்கள் கொங்கிரீட் செய்யப்பட்டு சுமார் 4 அடிக்கு சுவர்கள் கட்டப்பட்டு வேலைத்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டது. | திட்டப்பணியை முழுமையாக முடிக்க அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு தொகை போதுமானதாக இல்லை என்றாலும், அந்தந்த திட்டங்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகையின் கீழ் மதிப்பிடப்பட்ட பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. | கட்டுமானப் பணிகள் நிறைவடைந்து ஆக்கபூர்வமான பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (ஐ) | மஹர பிரதேச செயலகத்தின் சபிரிகமக் திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டு ரூபா 481,086 செலவில் நிர்மாணிக்கப்பட்ட உறுவல மேற்கு விவசாய உபகரண களஞ்சிய வளாகம், பணிகள் நிறைவடையாத காரணத்தினால் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேல் தளச் சுவர்களை ப்ளாஸ்டெரிங் செய்தல் மற்றும் படிக்கட்டுகளுக்கு ஒரு கைப்பிடியை வழங்குதல் போன்ற பணிகளை நிறைவு செய்யாமையால் உத்தேச நோக்கங்களக்கு பயன்படுத்த முடியாது காணப்பட்டது. | செயற்திட்டத்தை முடிக்க அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு தொகை போதுமானதாக இருக்கவில்லை. செயற்திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் மதிப்பிடப்பட்ட பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட வேலைத்திட்டம் அதே ஆண்டில் முடிக்கப்பட்டதுடன் முடிக்கப்படாத பகுதிகளுக்கு எந்த நிதி ஏற்பாடும் செய்யப்படவில்லை. | -மேற்படி- |
| (ஒ) | மஹர பிரதேச செயலக நரங்வல சனசமூக நிலையத்தின் இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ரூபா 923,000 செலவிடப்பட்ட போதிலும், சுவர்களை பூசுதல், தரையை தயார் செய்தல், ஜன்னல்களை நிறுவுதல் மற்றும் படிக்கட்டுகளுக்கு வேலி அமைத்தல் போன்ற பணிகளை எடுத்துச் செல்ல முடியாத காரணத்தினால் அதனை நிர்மாணித்து பயன்படுத்த முடியாதிருந்தது. | 2024 ஆம் ஆண்டில், உரிய நிதிஏற்பாடுகளைச் செய்து குறைபாடுகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | 2022 ஆம் ஆண்டு மஹர பிரதேச செயலகப் பிரிவின் கிரிக்கித்த கிழக்கு சேவை பியசவிற்கு 03 அறைகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 290,478 செலவிடப்பட்ட போதிலும் கட்டிடத்தின் ஜன்னல் கதவுகள் இடப்பட்டு பாவனைக்கு உகந்ததாக மாற்றப்படவில்லை. | அந்தந்த செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் மதிப்பிடப்பட்ட பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. | -மேற்படி- |
| (ஔ) | கம சமக பிளிசந்தரக் 2022 வேலைத்திட்டத்தின் கீழ், அத்தனகல்ல பிரதேச செயலகம் 03 மில்லியன் திட்டங்களுக்கு ரூபா 5,108,252 செலவிட்டதுடன், 14 திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு, திட்டத்தின் விரும்பிய நோக்கங்களை அடைய முடியாமல் இடையில் நிறுத்தப்பட்டுள்ளன. | முதல் காலாண்டில் ஒதுக்கப்பட்ட பணத்தில் 14 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, போதிய ஒதுக்கீடு இல்லாததால் மீதமுள்ள பகுதிகளை நிறைவேற்ற முடியவில்லை. தேவையான முன்னேற்பாடுகளைப் பெற்று, மீதமுள்ளவற்றைச் செய்ய எதிர்பார்த்துள்ளேன். | ஒப்பந்த காலத்திற்குள் செயற்திட்டங்களை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (க) | கம சமக பிளிசந்தர 2022 இன் கீழ் அத்தனகல்ல பிரதேச செயலகம் 320 மங்களதிரிய கிராம உத்தியோகத்தர் பிரிவின் பல்நோக்கு சேவா பியச கட்டிடத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் பணிகளை நிறைவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா தொகையில் ரூபா 700,000 தொகையில் ரூபா 543,593 செலவினம் மேற்கொள்ளப்பட்டு அத்திவாரம் மற்றும் 10 தூண்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு அதன் பின்னர் சேவா பியச நிர்மாணம் நிறுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 700,000 ஆகும். முதல் காலாண்டில் நிறைவு செய்யப்பட்ட பணிகளின் அளவான அத்திவார மற்றும் 10 கான்கிரீட் தூண்களுக்கு ரூபா 534,593 செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகள் இரண்டாவது காலாண்டில் நிறைவு செய்யப்பட வேண்டியதாக இருந்த போதிலும் அதற்கான நிதி ஒதுக்கீடு இடம்பெற்றிருக்கவில்லை. | உடன்படிக்கை காலப்பகுதியினுள் செயல் திட்டத்தை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது புதிய செயல் திட்டத்தினை அறிமுகப்படுத்தும் போது இந்த செயல் திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். |
| (கா) | கம சமக பிளிசந்தர நிகழ்ச்சித் திட்டம் 2022 இன் கீழ் அத்தனகல்ல பிரதேச அலுவலகம் 367 நாகொட கிராம உத்தியோகத்தர் பிரிவின் விளையாட்டு மைதானத்தின் அருகே அமைந்துள்ள காணியில் பல்நோக்கு கட்டிடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்காக | செயற்திட்டத்தின் மதிப்பு ரூபா 1,200,000 ஆக இருந்தது. முடிக்கப்பட்ட 10 கான்கிரீட் தூண்களை அமைக்க ரூபா 336,821 செலுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் காலாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால், | ஒப்பந்த காலத்திற்குள் செயற்திட்டத்தை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கப்பட்ட ரூபா 1,200,000 தொகையில் ரூபா 336,821 செலவிடப்பட்டு 10 தூண்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு இடை நடுவே நிறுத்தப்பட்டிருந்தது | மீதமுள்ள பணிகளை முடிக்க முடியாத நிலை உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | |
| (கி) | சௌபாக்கியா உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டம் 2021 இன் கீழ் அத்தனகல்ல பிரதேச செயலகத்தின் 246 பழைய வேயங்கொட கிராம உத்தியோகத்தர் பிரிவின் மேஜர் கே.டி. கருணாரத்ன வீதியின் சேதமடைந்து பழுது பார்க்கப்பட வேண்டிய இடங்களில் பக்கச் சுவர்கள் எழுப்பப்பட்டு வீதியின் ஆரம்பம் முதல் விகாரை வரையிலும் கார்பட் இடப்பட்டு அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 2,745,344 தொகை செலவிடப்பட்டு உரிய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், உத்தேசிக்கப்பட்டவாறு உரிய இடங்களில் பக்கச்சுவர்களை எழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் இதன் காரணமாக மழைக்காலங்களில் சேதம் ஏற்படக்கூடும் என்பது அவதானிக்கப்பட்டது. | இந்த செயல்திட்டத்தின் பக்க சுவர்களின் நிர்மாணிப்பதற்கு பணம் போதுமானதாக இல்லாத இருந்த காரணத்தால் அதனை மற்றும் ஒரு கட்டத்தில் மேற்கொள்வதற்கு ,து மிகவும் சேதமடைந்த நிலைக்கு உள்ளாகி இருந்தமையால் வீதிக்கு கார்பெட் இடப்பட்டு நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனால் பக்க சுவர்களில் நிர்மானிப்பதற்காக நிதியேற்பாடு எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு அதனை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |
| (கீ) | திவுலப்பிட்டி பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளருக்காக ஒதுக்கப்பட்ட நிறைவேற்று மட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட குடியிருப்புகள் நன்மையான நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் நீண்ட காலமாக பொருட்களை சேமிப்பதற்காக பயன்படுத்தப்பட்டு வந்தன. | இவ் உத்தியோகபூர்வ இல்லத்தின் தேவையான புனரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக தொழிநுட்ப உத்தியோகத்தர்களால் தயாரிக்கப்பட்ட ரூபா 4,610,182.98 மதிப்பிலான திருத்தப்பட்ட மதிப்பீட்டை பிரதேச செயலாளரினால் அங்கீகரித்து அனுப்பி வைத்துள்ளதுடன் அதற்கான ஏற்பாடுகளை பெற்று மேலதிக பணிகளை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. | பொறுப்புள்ள தரப்பினரிடமிருந்து முறையான ஆலோசனையைப் பெற வேண்டும் மற்றும் சொத்துக்கள் ஆக்கபூர்வமாகவும் திறமையாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கு) | பியகம பிரதேச செயலகத்திற்கு சொந்தமான உத்தியோகப்பூர்வ இல்லங்கள் இரண்டு மீளாய்வாண்டினுள் விளைவுள்ள பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இரண்டு உத்தியோகபூர்வ இல்லங்களில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக சராசரி மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், உரிய நிதியேற்பாட்டினை பெற்றுக்கொண்டு பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு காலத்தில் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (கூ) | 2019 ஆம் ஆண்டு முதல் கட்டான பிரதேச செயலகத்திற்கு சொந்தமான கிராம உத்தியோகத்தர் குடியிருப்பு 2019 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படவில்லை. | கட்டான பிரதேச செயலகம் 2024 ஆம் ஆண்டிற்கான அத்கல சேவா பியச, ஹினாட்டியன்யாவிற்கான புதிய மதிப்பீடுகளை தயாரித்து நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. | -மேற்படி- |
| (கெ) | அத்தனகல்ல பிரதேச செயலகம் பிரதேச செயலாளர் பதவிக்காக ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லம் 2019 ஆம் ஆண்டு முதல் விளைவற்று காணப்பட்டது. தற்போதைய பிரதேச செயலாளர் இங்கு வசிக்காத காரணத்தினால் தற்போது களஞ்சிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றமையாலும், உத்தியோகபூர்வ இல்லம் உரிய முறையில் பராமரிக்கப்படாததாலும் பாழடைந்துள்ளது. | உத்தியோகபூர்வ இல்லம் மிகவும் பழமையான கட்டிடமாகவும், குடியிருப்பதற்கு தகுதியற்றதாகவும் இருப்பதால், புதுப்பித்தல் பலனளிக்கவில்லை. எதிர்காலத்தில் மதிப்பீடுகளை தயாரித்து, நிதி ஒதுக்கீடுகள் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்காலிக களஞ்சிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றது. | அந்த சொத்துக்கள் ஆக்கபூர்வமாகவும் செயற்திறனாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (கே) | மீரிகம பிரதேச செயலகப் பிரிவில் 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 7 உத்தியோகபூர்வ சேவைக் கட்டிடங்கள் ரூபா 1,433,908 செலவில் பாதியளவே நிர்மாணிக்கப்பட்டமையினால் அவற்றில் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. 2018 | அனைத்து சேவா பியச மற்றும் நில செவன அலுவலகங்களின் குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், | செயற்திட்டத்தை நிறைவு செய்து பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும். கட்டிடங்களை பயன்படுத்தக்கூடிய நிலைக்கு கொண்டு வர தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பணிகள் சுமார் 5 வருடங்கள் கடந்தும், மீண்டும் கட்டுமானப் பணிகளைத் தொடங்க நடவடிக்கை எடுக்காததால் செலவு செய்த பணம் பயனற்ற செலவாக மாறியது. | அதற்கான மதிப்பீடுகள் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட முன்மொழிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். | ஏற்பாடுகள் கோரி விண்ணப்பித்து, செயற்திட்டங்களை நிறைவு செய்ய வேண்டும். |
| (கை) | வத்தளை பிரதேச செயலகத்தின் தேல வடக்கு கர்ப்பிணி பிணியாய்வு கட்டிடத்தில் மற்றும் வாசிகசாலை கட்டிடத்தினை நிர்மாணித்தல் 2020 ஆம் ஆண்டின் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைத்த ரூபா 500,000 தொகையான நிதியேற்பாடு மற்றும் 2021 ஆம் ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் கிடைத்த ரூபா 400,000 தொகையான நிதியேற்பாடுகளில் முறையே ரூபா 491,091 மற்றும் ரூபா 388,242 பயன்படுத்தப்பட்டு ,ந்த கட்டிடத்தில் அத்திவாரம் இடப்பட்டு செங்களால் கூரை வரையிலும் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு செயல் திட்டத்தினை நிறைவு செய்யாது கைவிடப்பட்டமையால் செலவிடப்பட்ட மொத்த தொகையும் விளைவற்ற செலவினமாகி உள்ளமை அவதானிக்கப்பட்டது. | கட்டிடத்தின் அத்திவாரம் இடப்பட்டு செங்களால் கூரை வரையிலும் மாத்திரம் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிதி ஏற்பாடு போதுமானதாக இல்லாது இருந்த காரணத்தால் தற்போது பணி நிறுத்தப்பட்டுள்ளது. நிதி ஏற்பாட்டினை பெற்றுக்கொண்டு மேலதிக பணிகளை முன்னெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. | நிதியேற்பாடுகள் துரிதமாக கோரப்பட்டு, செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பயன்பாட்டுக்கு எடுக்கப்பட முடியுமான நிலைக்கு உள்ளாக்கப்பட வேண்டும். |
| (கொ) | 13 பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான 78 நில செவன கட்டிடங்களில் கடமைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், நீர், மின்சாரம், சுத்திகரிப்பு வசதிகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்புகள் எதுவுமற்ற கட்டிடங்களுக்கு பாதுகாப்பு வேலி இல்லாதிருந்தமை, அலுவலக உபகரணங்களும் இல்லாதிருந்தமை, கூரையும் தயார் செய்யப்பட்டிராமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | நில செவன அலுவலகங்களில் கட்டாயமாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய குறைபாடுகளை நிவர்த்தி செய்ய தேவையான மதிப்பீடுகள் பெறப்பட்டு அது தொடர்பான நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள எதிர்கால பணிகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | குறைபாடுகளை கண்டறிந்து, பயன்பாட்டுக்கு எடுக்கப்பட முடியுமான நிலைக்கு உள்ளாக்கப்பட வேண்டும். |

### 3.4. செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 சௌபாக்கியம் உற்பத்தி கிராமங்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அத்தகல்ல பிரதேச செயலகத்திற்கு தங்க ஆபரணங்கள் மற்றும் பித்தளை உற்பத்தியாளர்களுக்கு பயன்படுத்துவதற்கும், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கும் ரூபா 2,925,000 செலவினம் மேற்கொள்ளப்பட்டு அத்தனகல்ல பிரதேச சபைக்கு சொந்தமான போனேகல பிரிவில் விளையாட்டு திடலுடனான காணியில் 02 மாடிகளை கொண்ட இடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை அவ்வாறே ஆக குறைந்த உட் கட்டமைப்பு வசதிகளான நீர் மின்சாரம் ஆகியவற்றை பெற்றுக் கொள்ள முடியாது இருந்தது. | பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுவிடம் எழுத்துப்பூர்வமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு பதிலளிக்கும் விதமாக, அத்தனகல்ல பிராந்திய ஒருங்கிணைப்புக் குழு ஒரு சில மாதங்களில் முழு கட்டிடத்தையும் நீர் மின்சாரத்துடன் தயார் செய்ய ஒப்புக்கொண்டது. | அந்த சொத்துக்களை பயன்படுத்தக்கூடியதாக மாற்ற வேண்டும் மற்றும் திறம்பட பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | அத்தனகல்ல பிரதேச செயலகத்தின் செயல்திட்ட இலக்கம் ATT/RIDP/16/146/3/2017 இன் பகுதி அளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தொழில்சார் பயிற்சி நிலையத்தின் பணிகளை நிறைவு செய்வதற்காக “2020 சபரி கமக் நிகழ்ச்சி திட்டம்” இன் கீழ் ரூபா 1,980,171 செலவிடப்பட்டிருந்தது. குறித்த பல்நோக்கு கட்டிடத்தின் திட்டத்தின் பிரகாரம் 2023 ஜுலை மாத அளவில் உடற்பயிற்சி நிலையம் ஒன்றினையும் அதனை அண்மையதாக 03 அறைகளையும் சுவர் எழுப்பி | 2017 கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம் மற்றும் 2020 சபிரி கம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டிலும் மாகாண சபைகள் நிகழ்ச்சி திட்டம் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது எதிர்காலத்தில் குறித்த நிர்மாணங்களை நிறைவு செய்து ஆக்கபூர்வமாக பயன்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கை காலத்தினுள் செயற்திட்டத்தை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | கூரை நிறைவு செய்யப்பட்டுள்ள போதிலும் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய நிலையில் குறித்த நிர்மாண பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்காத காரணத்தால் செலவிடப்பட்ட பணம் விளைவற்ற செலவினமாகி உள்ளமை. | | |

**3.5. பணம் விடுவிக்கப்பட்ட போதிலும், செயன்முன்னேற்றத்தை அடையப்படாத செயற்திட்டங்கள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | சௌபாக்ய புடவைக் கைத்தொழில் கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், திவுலப்பிட்டி பிரதேச செயலகத்தினால் அசன்னாவத்தையில் உள்ளூராட்சி சபைக்கு சொந்தமான காணியில் பேஷகர்ம விற்பனை நிலையத்தை நிர்மாணித்துள்ளதுடன், அசன்னாவத்தையில் உள்ள சேக்குவத்தை நூலக கட்டிடத்தின் மேல் தளத்தில் இந்த நிலையத்தை நிர்மாணிப்பதற்கு ரூபா 2,925,909 செலவிடப்பட்டுள்ளது. இக்கட்டடத்தின் பணியை முடிக்க முடியாமல் போனதால், 2022 இல் கம சமக பிளிசந்தரக் திட்டத்தின் கீழ், ரூபா 1,261,981 செலவில் இரண்டாம் தளம் கட்டி முடிக்கப்பட்டு, மேல் தளம் நூலகமாகத் தயார் செய்யப்பட்டது மற்றும் கீழ் தளம் விற்பனை மையமாக உள்ள போதிலும், அது பயன்படுத்தப்படவில்லை. | பிரதேச செயலாளரிடம் உள்ளூராட்சி மன்றம் முறையாக கட்டிடத்தை ஒப்படைக்காத காரணத்தினால் அசன்னாவத்தை சௌபாக்ய புடவைக் விற்பனை நிலையத்தை இக்கட்டடத்தினுள் நடத்த முடியாமல் போனது. இப்பிரச்னை, பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுவுக்கு அனுப்பப்பட்டு, அதன்படி, பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் தலைமையில், 2024 ஜனவரி 23 இல் நடாத்தப்பட்ட கள ஆய்வின்படி, கட்டடத்தின் கீழ் தளத்தை தயார் செய்ய, பிரதேச சபையின் பணி அதிகாரிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. | குறித்த கட்டிடத்தை பிரதேச செயலகத்திடம் ஒப்படைத்து விற்பனை நிலையத்தின் செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும். |
| (ஆ) | கிராம சக்தி ஜனதா முயற்சிகள் நிகழ்ச்சி திட்டம் - 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 13 பிரதேச செயலகங்களினுள் 152 சங்கங்கள் நிறுவப்பட்டு ரூபா 155,617,450 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 99,951,670 | 2021 ஆம் ஆண்டில் முதல் காலாண்டில் ஏற்பட்ட கொரோனா நிலைமை காரணமாக கிராம சக்தி சங்கங்கள் செயலிழந்துள்ளன கணக்கின் பணத்தினை பயன்படுத்தப்பட வேண்டிய | செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. அறவிடக்கூடிய மாற்று வழிகளின் |

| | | |
|---|---|---|
| தொகை தாய் கணக்கு மற்றும் நுண் நிதி கணக்குகளுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 73,123,443 தொகையானது அந்த கணக்குகளில் விளைவற்ற விதத்தில் காணப்பட்டது. 21 சங்கங்கள் மாத்திரம் சுழற்சி நிலையில் காணப்படுவதுடன் 131 சங்கங்கள் செயலிழந்து காணப்படுவதுடன் 95 நபர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 2,451,275 தொகையான கடன் தொகை அறவிட முடியாத கடனாக மாறி இருந்தது. | விதம் தொடர்பிலான அறிவுரைகள் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வைக்கவில்லை என்பதை சுட்டிக் காண்பிக்கின்றேன். 2021 மார்ச் 12 ஆம் திகதி கடிதத்தின் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளவாறு பதிவிலிருந்து அகற்றுவதற்கு உரிய ஆவணங்கள் தற்போது அனுப்பப்பட்டுள்ளன. | ஊடாக கடனை அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

### 3.6. பெறுகைகள்

| | | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | (i) | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 6.3.6 ஆம் பந்தியின் பிரகாரம், விலைக்கேள்வி திறத்தல் தொடர்பிலான பணிகள் உரிய மாதிரி பத்திரம் ஒன்றில் அடிக்கையிடப்பட வேண்டியத்துடன் அந்த அறிக்கை பதிவுகள் விலை கேள்வி திறத்தல் குழுவினால் அனைத்து அங்கத்தவர்களினதும் கையொப்பம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனினும் விலைக்கேள்வி திறத்தல் குழுவின் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் பெறுகை நடவடிக்கைகளில் குறித்த மாதிரி பத்திரத்தை பயன்படுத்துமாறும் உரிய சுற்றறிக்கை அறிவுரைகள் தொடர்பில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறும் உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |
| | (ii) | 2023 ஏப்ரல் 28 ஆம் திகதி திறக்கப்பட்ட கூறு விலைகள் தொடர்பில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை திகதியின்றி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 2.11.3(ஆ) பந்தியின் பிரகாரம் குழுவின் கூட்டங்களின் அறிக்கைகள் | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 6.3.6 ஆம் பந்தியின் பிரகாரம், விலைக்கேள்வி திறத்தல் தொடர்பிலான அறிக்கைப் பதிவுகள் பேணப்படும் மாதிரி கூட்டங்களுக்கு பங்குபற்றல் மற்றும் விலைக்கேள்வி திறத்தல் பதிவுகளின் விண்ணப்பங்கள் பூர்த்தி | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | பெறுகைகள் கையேட்டில் உள்ளடங்கியுள்ள திட்டவட்டமான மாதிரிக்கமைய அறிக்கையிடப்பட வேண்டியதுடன், அது வருகைதந்துள்ள அங்கத்தவர்களால் சான்றுபடுத்தப்பட வேண்டும். சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல் தொடர்பில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உரிய மாதிரியினை சமர்ப்பித்திருக்கவில்லை என்பதுடன் குழுவின் ஒரு அங்கத்தவர் கையொப்பமிட்டிருக்கவில்லை. | செய்யப்பட்டிருக்காத போதிலும், விலைக்கேள்வி திறத்தல் குழுவினால் திறக்கப்பட்ட விலைக்கேள்வியின் அடிப்படையில் சிறு கையொப்பம் இடப்பட்டுள்ளது. மேலதிக கொள்வனவு நடவடிக்கைகள் தொடர்பில் குறித்த மாதிரிகளை பயன்படுத்துமாறும், குறித்த சுற்றறிக்கையின் அறிவுரைகள் குறித்து கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | |
| (iii) | அரச நிறுவனங்களால் சிற்றுண்டி சாலைகளை நடத்திச் செல்லும்போது சுகாதார மற்றும் உள்நாட்டு சுதேச மருத்துவ அமைச்சினால் வெளியிடப்பட்ட 01-17/2015 ஆம் இலக்க 2015 ஏப்ரல் 29 ஆம் திகதிய சுற்றறிக்கை பின்பற்றப்பட வேண்டிய போதிலும் இந்த பெறுகையின் போது மற்றும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போது மாவட்ட செயலகத்தினால் இந்த ஏற்பாடு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அரச நிறுவனங்களினால் சிற்றுண்டிச்சாலைகளை நடத்திச் செல்லும்போது சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் வெளியிடப்பட்ட 01-17/2015 ஆம் இலக்க 2015 ஏப்ரல் 29 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஆ) | நீர்கொழும்பு பிரதேச செயலகத்திற்காக எழுதுகருவிகளை கொள்வனவு செய்தல் அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 2006 இன் 5.6.1(இ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொள்வனவு செய்வதற்கு உள்ள பொருளின் வியாபாரப் பெயர் அமைப்புக்குறிப்பீடு ஒன்றாக கருத்தில் கொள்ளப்படக் கூடாத போதிலும் எழுது கருவிகளை கொள்வனவு செய்வதற்கு உரிய மாதிரி பரிசோதனையில் ஆகக்குறைந்த விலைகளை நிராகரித்திருந்தமைக்கு வியாபாரப் பெயர் இல்லாதிருந்தமை காரணமாக குறிப்பிடப்பட்டிருந்தது. பெறுகைகள் | நீர்கொழும்பு நகரசபை அதிகாரப் பிரதேசத்தில் எழுதுபொருட்களை இலகுவாகவும் விரைவாகவும் பெற்றுக்கொள்வதற்காக அலுவலகத்தைச் சுற்றியுள்ள விநியோகத்தர்களினடமிருந்து விலைகள் அழைக்கப்பட்டதுடன், மாவட்டச் செயலகத்தில் பதிவு செய்யுமாறு அந்த விநியோகத்தர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | வழிகாட்டி கோவையின் 2006 இன் 3.4.3 (இ) இன் பிரகாரம் வழங்குனர்கள் பதிவு செய்துள்ள போது பதிவு செய்த நிறுவனங்களிலிருந்து மாத்திரம் விலை கேள்வி கோரப்பட வேண்டிய போதிலும் விலைக்கேள்வி கோரப்பட்டுள்ள 09 நிறுவனங்களும் பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | வத்தளை பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடத்திற்காக அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது ரூபா 2,470,358 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 3.2 இன் பிரகாரம் தேசிய போட்டி அடிப்படையிலான விலை கேள்வி கோரல் பயன்படுத்தப்படாது பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 3.9 ஆம் பிரிவின் பிரகாரம் சந்தை விலை ஒப்பீட்டு முறைமையில் மட்டுப்படுத்தப்பட்ட கூறு விலைகள் பெற்றுக்கொள்ளல் இடம்பெற்றிருந்தது. | 2023 திசெம்பர் 17 ஆம் திகதி பிரதமர் தலைமையில் புதிய அலுவலகக் கட்டிடத்தை திறப்பதற்கு தயார்படுத்துவதற்காக கிடைத்த குறுகிய அறிவிப்பின் அடிப்படையில் கம்பஹா மாவட்ட செயலகத்தின் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிலிருந்தும், சிறந்த வியாபார பெயர் கொண்ட நிறுவனங்களிலிருந்தும் விலைகள் கோரப்பட்டன என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக மாவட்ட செயலகத்தின் பெறுகைகள் குழுவின் மேவுகை ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன். | -மேற்படி- |
| (ஈ) | ஜா-எல பிரதேச செயலகத்தின் கெப் வண்டிக்காக ரூபா 208,800 படியாக 4 டயர்களை கொள்வனவு செய்வதற்காக மற்கும் ரூபா 237,000 தொகையா கணினிகளை கொள்வனவு செய்யும் போது பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 5.6 மற்றும் 5.2.1(அ) ஆம் பிரிவுகளின் பிரகாரம் விலை கேள்வி கோரல் கோவைகளில் உள்ளடக்கப்பட வேண்டிய கொள்வனவுகளுக்கு எதிர்பார்க்கும் பொருட்களின் அமைப்பு குறிப்பிடுகளை சமர்ப்பிக்காது அமைப்புக் குறிப்பீடுகளுடன் ஒத்துப் போகவில்லை என குறிப்பிட்டு ஆக குறைந்த விலைகள் நிராகரிக்கப்பட்டு இருந்தன. | உரிய கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது ஆகக் குறைந்த விலை என்பது நடைமுறையில் இருந்து விலகி வாகனத்தின் நீண்ட கால நிலவுகையை அடிப்படையாகக் கொண்டு G.T.Super ரகத்திலான விலை கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டு லோரா டயர் நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்வதற்கு தொழில்நுட்ப குழு தீர்மானித்தமையின் அடிப்படையில் பெறுவைகள் குழு அந்த தீர்மானத்தை அங்கீகரித்து குறித்த கொல்வனவு மேற்கொள்ளப்பட்டது. Sap | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | Computers நிறுவனம் பேட்டரிக்காக குறைந்த விலைகளை சமர்ப்பித்து உள்ள போதிலும் நிறுவனத்தின் உத்தரவாத காலம் தெளிவாக குறிப்பிடப்படவில்லை. கொள்வனவு செய்த நிறுவனங்களான. AMW Computers பேட்டரிக்கு ஒரு வருட உத்தரவாத காலம் குறிப்பிடப்பட்டுள்ளமையால் அந்த நிறுவனத்தில் ,ருந்து கொள்வனவு செய்வதற்கு தொழில்நுட்பக் குழு தீர்மானம் எடுத்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | |

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீரிகம பிரதேச செயலகத்தின் உழவு இயந்திரம் மற்றும் பௌசர் பல வருடங்களாக செயலிழந்திருந்தன. | அவசர காலங்களில் பயன்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட உழவு இயந்திரம் மற்றும் பௌசர் ஆகியவை அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. | அந்த சொத்துக்கள் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | நீர்கொழும்பு பிரதேச செயலகத்தில் 02 உத்தியோகபூர்வ இல்லங்கள் உள்ளதோடு, ரூபா 16,462,938 பெறுமதியான பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லம் பயன்படுத்தப்படாதிருந்ததுடன், உடையார்தோப்புவ கிராம அதிகாரியின் உத்தியோகபூர்வ வீடு மதிப்பீடு செய்யப்படவில்லை. | நீர்கொழும்பு பிரதேச செயலாளர உத்தியோகபூர்வ குடியிருப்பு சமுர்த்தி தலைமையகத்தில் இடப்பற்றாக்குறை காரணமாக சமுர்த்தி மகா சங்கத்தினருக்கு சொந்தமான பொருட்கள் தற்போது அந்த கட்டிடத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் உடையார்தோப்பு கிராம உத்தியோகத்தர் குடியிருப்பும் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதாக அலுவலக தொழிநுட்ப உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தொம்பே பிராந்திய செயலகத்தில் மூடப்பட்ட 02 பாடசாலைகளின் கட்டிடங்கள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டதுடன், இக்கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு வினைத்திறனான பாவனைக்கு உட்படுத்தப்படவில்லை. | இரண்டு கட்டடங்கள் சீரமைக்க முடியாத நிலையில் உள்ளன. | சொத்துக்கள் சொத்துக்கள் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் பயன்படுத்தக்கூடிய கட்டிடங்கள் உடனடியாக கண்டறியப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மினுவாங்கொடை பிரதேச செயலகத்தின் அனர்த்த பிரிவிற்கு சொந்தமான 02 உழவு இயந்திரங்களும் 2017 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இயக்கப்படவில்லை. இந்த டிராக்டர்கள் பல ஆண்டுகளாக ஒரே இடத்தில் நிறுத்தப்பட்டதால் பேட்டரி சக்கரங்கள் உள்ளிட்ட பாகங்கள் செயல்படாமல் உள்ளது. | மினுவாங்கொடை பிரதேச செயலகப் பிரிவில் செயலிழந்திருந்த இரண்டு உழவு இயந்திரங்களும் இரண்டு பவுசர்களும் அப்போதைய மாவட்டச் செயலாளரின் பணிப்புரைக்கமைய 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 23 ஆம் திகதி மினுவாங்கொடை நகரசபையின் தேவைகளுக்காக தற்காலிகமாக ஒதுக்கப்பட்டன. | சொத்துக்கள் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | திவுலப்பிட்டி பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளருக்காக ஒதுக்கப்பட்ட நிறைவேற்று மட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட குடியிருப்புகள் நன்மையான நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் நீண்ட காலமாக பொருட்களை சேமிப்பதற்காக பயன்படுத்தப்பட்டு வந்தன. | இந்த உத்தியோகபூர்வ இல்லத்தின் தேவையான புனரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக தொழிநுட்ப உத்தியோகத்தர்களால் தயாரிக்கப்பட்ட ரூபா 4,610,182 மதிப்பிலான திருத்தப்பட்ட மதிப்பீட்டை பிரதேச செயலாளரினால் அங்கீகரித்து அனுப்பி வைத்து அதற்கான ஏற்பாடுகளை பெற்று மேலதிக பணிகளை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. | பொறுப்புள்ள தரப்பினரிடமிருந்து முறையான ஆலோசனையைப் பெற வேண்டும் மற்றும் சொத்துக்கள் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | மீரிகம பிரதேச செயலகத்தின் உழவு இயந்திரம் மற்றும் பௌசர் பல வருடங்களாக செயலிழந்திருந்தன. | அவசர காலங்களில் பயன்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட உழவு இயந்திரம் மற்றும் பவுசர் ஆகியவை அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. | சொத்துக்கள் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | அத்தகல்ல பிரதேச செயலகத்தின் நிறைவேற்றுத் தரமற்ற ஊழியர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களில் ஒன்று கிரிப்பிடிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ளதுடன், அது இதுவரையிலும் பயன்பாட்டுக்கு பொருத்தமான நிலையில் காணப்படாத காரணத்தால் 2021 ஆம் ஆண்டு முதல் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2022 திசெம்பர் 10 ஆம் திகதி அல்லது 2022 திசெம்பர் 11 ஆம் திகதி குறித்த உத்தியோகபூர்வ இல்லத்திற்கு வெளி தரப்பினர்கள் புகுந்து சேதம் ஏற்படுத்தி இருந்ததுடன் இது தொடர்பில் நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத்தனகல்ல பிரிவின் 329/சீ கிரிபிடிய மத்தி கிராம உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சேதம் ஏற்படுத்தப்பட்டமை தொடர்பில் நிதி பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டதுடன் இறுதி அறிக்கை கிடைத்துள்ளதுடன் அதற்குரிய மேலதிக நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | சேதத்திற்கு பொறுப்பு கூற வேண்டிய நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் சொத்துக்களை உரிய முறையில் ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்த வேண்டும் என்பது. |
| (ஏ) | தொம்பே பிரதேச செயலகத்தின் ரூபா 10,500,000 பெறுமதியான 07 நில செவன அலுவலகங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 3 அலுவலகங்களின் காணிகள் தனிப்பட்ட காணிகள் என்பதால் மதிப்பீடு செய்வதற்கு முடியாதிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. 4 அலுவலகங்கள் நில அளவையாளர் திணைக்களத்திற்கு ஈடுபடுத்துவதற்கு உரிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டவாறு உள்ளன. | சொத்துக்களை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | பியகம பிரதேச செயலகத்தில் ரூபா 5,500,000 பெறுமதியான 06 நிலசெவன அலுவலகங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணியில் அமைந்துள்ள போதிலும், அவை மதிப்பீடு செய்யப்படவில்லை. | நில அளவைத் திணைக்களம் நில அளவைப் பணிகளை ஆரம்பித்துள்ளதுடன், அதுதொடர்பான பணிகள் நிறைவடைந்து, தேவையான நடவடிக்கைகள் நிறைவு செய்யபபட்டு உடனடியாகக் கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | மஹர பிரதேச செயலகத்தின் அதிகார பிரதேசத்திற்கு உட்பட்ட எல்லையினுள் பிரதேச செயலகத்திற்கு உரிய நில செவன மற்றும் இரண்டு சேவா பியச நிலையங்கள் அரசாங்கத்திற்கு உரித்தற்ற காணிகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 11 நில செவன மற்றும் சேவா பியச கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2 இரண்டு தனிப்பட்ட காணிகள் நீங்களாக போது நில அளவையாளர் திணைக்களத்தினால் அளவீட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் துரிதமாக கணக்கு வைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | சொத்துக்களின் பெறுமதியை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஓ) | அத்தனகல்ல பிரதேச செயலகத்தின் அதிகார பிரதேசத்திற்கு உட்பட்ட சேவா பியச / நில செவன அலுவலகங்கள் 22 காணப்படுகின்ற. அவற்றுள் 09 நில செவன / சேவா பியசவின் உரித்தானது இந்த பிரதேச செயலகத்திடம் காணப்படுவதுடன் அவற்றின் கட்டிடங்கள் மாத்திரம் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டுள்ள போதிலும் காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 மார்ச் 20 ஆம் திகதிய அத்/03/08-நில செவன கடிதத்தின் மூலம் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், 2023 ஜுன் 13 மற்றும் 2023 செப்தம்பர் 20 ஆம் திகதிய கடிதங்களின் மூலம் நினைவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | காணிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) | கட்டான பிரதேச செயலகப் பகுதியிலுள்ள எத்கால சேவா பியச, ஹீனடியானா மற்றும் அலையதுப்பிட்டிய ஆகிய 03 நில செவன மற்றும் சேவா பியச அலுவலகங்களின் பெறுமதி மதிப்பிடப்படவில்லை. | தொழிநுட்ப உத்தியோகத்தரால் எத்கால உத்தியோகபூர்வ இல்லம் (கி.உ.) பயன்படுத்தத் தகுதியற்றது என்று அறிக்கை அளித்துள்ளார். | -மேற்படி- |
| (க) | அத்தனகல்ல பிரதேச செயலகத்தில் 3 பாடசாலைகளும், மினுவாங்கொட பிரதேச செயலகத்தில் 5 பாடசாலைகளும், திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்தில் 4 பாடசாலைகளும், மீரிகம பிரதேச செயலகத்தில் 2 பாடசாலைகளும் மூடப்பட்டு பிரதேச செயலகங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ள போதிலும் காணி மற்றும் கட்டிடங்களின் | மீரிகம பிரதேச செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்ட இரண்டு பாடசாலைகளும் மதிப்பீட்டிற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அத்தனகல்ல பிரதேச செயலகப் பிரிவில் மூடப்பட்ட 3 பாடசாலைகள் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இந்த காணியை விளையாட்டு மைதானமாக | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| பெறுமதி மதிப்பீடு செய்யப்படவில்லை. | அபிவிருத்தி செய்வதற்காக, 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் 29 ஆம் திகதி காணியின் சுவீகாரம் அத்தனகல்ல பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மினுவாங்கொடை பிரதேச செயலகப் பிரிவில் மூடப்பட்ட 4 பாடசாலைகளில் 3 பாடசாலைகள் விளைவுள்ள நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. | |

**3.8 நட்டங்கள் மற்றும் இழப்புகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அத்தனகல்ல பிரதேச செயலகத்தினால் 2017 ஜூலை 19 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இடர்கள் பிரிவிற்கு சொந்தமான 03 உழவு இயந்திர பௌசர்கள் பதுள்ளை மாவட்டத்தின் உமா ஓயா செயற்திட்ட பணிகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்தது. 2018 ஏப்ரல் 5 ஆம் திகதி 3 உழவு இயந்திர பௌசர்களும் மீள வழங்கப்பட்டிருந்த போதிலும் வெள்ளை இரும்பு கொண்ட இந்த இரு புறமும் அதிக அளவில் சேதத்திற்கு உள்ளானமையால் சமிக்ஞை விளக்குகள் உடைந்திருந்தமை, உதிரிப்பாகங்கள் காணாமல் போனமை போன்ற பாரிய சேதம் ஏற்பட்டிருந்தது. அது தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அது தொடர்பில் சம்பவ குறிப்பு புத்தகங்களில் வைக்கப்பட்ட பதிவுகளிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டில் இந்த நட்டம் ஏற்பட்டுள்ள போதிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட்டு பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உமா ஓயாவிற்கு பௌசர் வாகனங்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், வாகனங்கள் கையளிக்கும் போது அந்தந்த வாகனங்களில் உள்ள குறைபாடுகள் குறித்து மாவட்ட செயலாளர் அலுவலகம் மற்றும் தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில், நிதிபபிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பாக ஒரு புதிய செலவு மதிப்பீட்டை தயார் செய்து நிதியேற்பாடுகளை பெற எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மினுவாங்கொடை பிரதேச செயலகத்திற்கு உரிய வண்டி 1999 ஜூலை மாதம் விபத்துக்கு உள்ளானவையால் ஏற்பட்டிருந்த நட்டத்திலிருந்து காப்புறுதி அறவிட முடியாத நட்டமான ரூபா 189,360 தொகை குறித்த வண்டியின் சாரதியிடமிருந்து அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சுமார் 25 வருடங்கள் கடந்துள்ள போதிலும் குறித்த நட்டத்தினை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | வழக்குகள் வழக்கத்திற்கு மாறாக தாமதமாகி வருவதால், சட்டமா அதிபரின் உதவியைப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மினுவாங்கொடை பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | அத்தனகல்ல பிரதேச செயலகத்தின் சாமுர்த்தி மற்றும் பல பிரிவுகளின் அச்சீட்டு இயந்திரம் 2022 அக்டோபர் 17 ஆம் திகதி காணாமல் போயிருந்தது. நிதி பிரமாணம் 104(3) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட நட்டம் தொடர்பில் ஆரம்ப அறிக்கையொன்றின் பிரகாரம் நட்டத்தின் பெறுமதி ரூபா 34,560 என மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் நட்டத்தினை பாதுகாப்பு சேவை நிறுவனத்திலிருந்து அளவிடுவதற்கு தவறியிருந்தது. | சமுர்த்தி மற்றும் துறைக்குரிய பிரிவுகளின் அச்சீட்டு இயந்திரம் காணாமல் போனமைக்கு உரியதாக நிதி பிரமாணம் 104(4) இன் கீழான நட்டம் தொடர்பில் ,றுதி அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறே போலீஸ் விசாரணைகளில் இப்போதைய நிலை தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு நிட்டம்புவ போலீஸ் நிலையத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தற்போதைய நிலைமை தொடர்பான அறிக்கை கோரப்பட்டுள்ளதுடன் அதற்கு அமைய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | - மேற்படி - |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20 ஆம் திகதிய கம்பஹா மாவட்ட மோட்டார் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தமான சமிக்ஞை கோபுரம் இடிந்து வீழ்ந்ததன் காரணமாக, நிதி பிரமாணம் 104(4) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட நட்டங்கள் தொடர்பான விசாரணையின் இறுதி அறிக்கையின்படி, திட்டமிடல் திணைக்கள கட்டிடத்திற்கு மற்றும் அதன் உபகரணங்களுக்கு ஏற்பட்ட | நட்டத்தை செலுத்தாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என லங்கா பெல் நிறுவனத்திற்கு கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என நம்புகிறோம். | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| இழப்பு ரூபா 861,938 ஆகும். கம்பஹா மாவட்ட செயலாளர் நிதி பிரமாணம் 104(1)(ஆ) இன் அடிப்படையில் முறையான விசாரணையை நடத்த குழுவொன்றை நியமிப்பதற்கு கம்பஹா மாவட்ட செயலாளரினால் பரிந்துரை வழங்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பான விடயங்களில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இந்த நட்டம் அறவிட அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**3.9 முகாமைத்துவ நலிவுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சின் 2016 ஜனவரி 12 ஆம் திகதிய சுற்றறிக்கை இலக்கம் 1/2016 இன் பிரகாரம் பிரதேச செயலாளர்களினால் வெளியிடப்படும் கொடுப்பனவுகளை செலுத்தும் சான்றிதழ் பத்திரத்தின் பிரகாரம் படிகளை பெறுபவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவுகள் உப தபால் அலுவலகங்கள் / தபால் அலுவலகங்கள் மற்றும் திவிநெகும வங்கியின் மூலம் மாத்திரம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் நீரிகொழும்பு பிரதேச செயலகத்தின் முதியோர் பட்டியலில் 580 நலனாளிகளுக்கு ரூபா 2,900,000 தொகை கிராம உத்தியோகத்தரின் ஊடாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மிகவும் பொருத்தமான நலனாளிகளை தெரிவு செய்து 2024 ஜனவரி மாதம் முதல் கொடுப்பு உணவுகளை செலுத்துவதை தபால் அலுவலகங்களின் மூலம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. | - மேற்படி - |
| (ஆ) | சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சின் 2016 ஜனவரி 12 ஆம் திகதிய சுற்றறிக்கை இலக்கம் 1/2016 இன் 5.5 பிரகாரம் முதியோர் படிகள் ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதியின் பின்னர் ஆரம்பிக்கப்படும் 07 வேலை நாட்களுள் அனைத்து தபால் / உப தபால் மற்றும் திவி நெகும வங்கியின் மூலம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் நீர் | இது தொடர்பில் கிராம உத்தியோகத்தர்களின் ஊடாக நலனாளிகளுக்கு அறிவிப்பு மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவர்கள் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு வருகை தராத காரணத்தால் ரூபா 2,112,200 தொகை மிகை அறவீடாகியிருந்தது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கொழும்பு பிரதேச செயலகத்தின் 2023 ஜூலை ஆகஸ்ட் மாதங்களுக்கான நிதியேற்பாடு தாமதமாக கிடைத்திருந்ததுடன் அதன் காரணமாக ரூபா 2,112,200 தொகையான பணத்தை செலுத்த முடியாது இருந்த எனத்தால் தபால் அலுவலகங்களால் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. | | |
| (இ) | கம்பஹா மாவட்டத்தின் 13 பிரதேச செயலகப் பிரிவுகளில் 11,851 குடும்பங்கள் அங்கீகரிக்கப்படாத வீடுகளிலும், 13,870 குடும்பங்கள் தற்காலிக வீடுகளிலும், 4,137 குடும்பங்கள் மலசலகூட வசதியில்லாத குடும்பங்களும், பொதுத் தண்ணீர் குழாய்களை பயன்படுத்தும் 9,351 குடும்பங்களும், மின்சார வசதி இல்லாத 1,942 வீடுகளும், வீதி வசதிகள் இல்லாத 3,968 வீடுகளும் எனுமாறு குடியிருக்கத் தேவையான குறைந்தபட்ச வசதிகள் கூட இன்றி வாழும் மக்கள் மீது அரசு கவனம் செலுத்தி, அந்த குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கு உரிய திட்டத்தை செயல்படுததல் தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | குறைந்தபட்ச வசதிகள் இல்லாத மக்களின் முன்னேற்றத்திற்கு மீண்டும் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | பணி நீக்கத்திற்கு உள்ளாகியுள்ள மினுவாங்கொடை பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர் ஒருவருக்கு 2010 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் இடர் கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் அப்போது பதவியில் நிரந்தரமாக்குவதற்கு உரிய தகைமைகளை உறுதி செய்ய முடியாது என்பதையும் அடிப்படையில் சேவை காலம் 10 வருடங்கள் கடந்து இருந்த போதிலும் சேவையில் நிரந்தரமாக்கி இருக்க வில்லை. தாபன விதி கோவையின் xxiv அத்தியாயத்தின் 10.4 பிரிவின் பிரகாரம் பிணையின்றி கடன் பெற்றுக்கொள்ள 10 வருட சேவை காலத்திற்கு மேற்பட்ட நிரந்தர உத்தியோகத்தர் ஒருவருக்கு இயலுமான போதிலும் குறித்த பெண் | குறித்த பெண் உத்தியோகத்தருக்கு அடிக்கடி அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டு கடனை அளவீடு செய்ய தொடர்ச்சியான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றது என்பதை குறிப்பிட்டு கொள்கின்றேன். | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 156(1) என் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர் நிரந்தரமாக்கப்பட்டிடாத காரணத்தால் அது தொடர்பில் கருத்தில் கொள்ளாது இந்த கடன் தொகை வழங்கப்பட்ட காரணத்தால், மேலும் ரூபா 62,483 அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. குறித்த கடன் கோரல் கடிதம் தாபன பிரிவினால் 04 இலக்கத்தின் கீழ் கோரப்பட்டுள்ள நன்னடத்தை காலப்பகுதியின் இறுதியில் பதவியினை நிரந்தரமாக்குவதற்கு சந்தர்ப்பமுள்ளதா என்பதற்கு “ஆம்” என பூரணப்படுத்தப்பட்டிருந்தமை காரணமாக அமைந்திருந்தது. | | |
| (உ) | குறித்த மாதம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் கள உத்தியோகத்தர்கள் எதிர்கால வேலைத்திட்டத்தை மேற்பார்வை உத்தியோகத்தர்களிடம் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும் எனினும், திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்தில் எதிர்கால வேலைத்திட்டங்கள் தாமதமாக சமர்ப்பிக்கப்பட்ட போதும் மேற்பார்வை உத்தியோகத்தர்கள் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை. இதன்காரணமாக, உத்தியோகத்தர்கள் எதிர்கால நிகழ்ச்சிகளை தாமதமாக முன்வைக்கும் வழக்கம் ஏற்பட்டது. | கள உத்தியோகத்தர்கள் எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்களை அந்தந்த மாதத்தின் தொடக்கத் திகதிக்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகவும், அடுத்த மாதத்தின் முதல் வாரத்தில் செய்யப்படும் நிகழ்ச்சிகளையும் சமர்ப்பிக்குமாறு அனைத்துக் கள உத்தியோகத்தர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | எதிர்கால செயற்திட்டங்கள் மாதம் ஆரம்பிக்க முன் அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மாவட்ட செயலகத்தின் பாதுகாப்பு மற்றும் துப்புரவு சேவையின் இரண்டு தொடர்புடைய சேவை ஒப்பந்தங்களின் பிரிவு 16 இன் படி, வழங்குநரால் பணியமர்த்தப்பட்ட ஊழியர்களின் வயது 18 வயதுக்கு குறையாமல் மற்றும் 65 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும், ஆனால் பாதுகாப்பு மற்றும் துப்புரவு சேவைகளை வழங்கிய இரண்டு வழங்குநர்களால் பணியமர்த்தப்பட்ட ஊழியர்களின் வயது 66-79 வயதுக்கு இடையில் இருந்தது, ஆனால் மாவட்ட செயலகம் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | அந்த நேரத்தில் நாட்டில் கோவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக, வேறு வழியில்லாது அவ்வாறு செய்ய நேர்ந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகங்களினால் 11 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அதற்காக 20 இலக்குகள் இனங்காணப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதி வரை அந்த இலக்குகளை நிறைவேற்றும் செயல்முன்னேற்றம் எதிர்பார்த்த 12 இலக்குகளுக்காக 1 சதவீதத்திலிருந்து 49 சதவீதத்திற்கும், எதிர்பார்த்த 5 இலக்குகளுக்காக 50 சதவீதத்திலிருந்து 74 சதவீதத்திற்கும் 3 இலக்குகளுக்காக 75 சதவீதத்திலிருந்து 100 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவுகளில் காணப்பட்டன. | 2024 ஆம் ஆண்டுகளிலிருந்து உரிய குறிக்கோள்களை நிறைவேற்றும் செயல்முன்னேற்றத்தை உயர்ந்த மட்டத்தில் பேணுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | உரிய இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கம்பஹா மாவட்ட செயலகத்தின் மற்றும் 13 பிரதேச செயலகங்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தொடர்பான விபரத்தின் அடிப்படையில் பதவி நிலை தரத்திலான 04 பதவிகளும், மூன்றாம் தரத்திலான 04 பதவிகளும் இரண்டாம் தரத்திலான 310 பதவிகளும் ஆரம்ப நிலையிலான 1 பதவி எனுமாக 319 பதவிகள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக வெற்றிடமாக காணப்பட்டன. | மும்மாத மற்றும் மாதாந்த அறிக்கைகளின் மூலம் உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் பொது நிர்வாக அமைப்பு மற்றும் உள்நாட்டு அலுவலக அமைச்சுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது இரண்டாம் நிலை மட்டத்திலான வெற்றிடங்களில் பெரும்பாலானவை புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் பிரிவிற்கு வழங்கப்பட்ட பின்னர் அனுப்புவதற்கு முடியும் என அறிவித்துக் கொள்கின்றேன். | அத்தியாவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |
| (ஆ) 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக ஊழியர் விபரங்களின் பிரகாரம் பதவி நிலை தரத்திலான 5 உத்தியோகத்தர்களும் இரண்டாம் நிலை மற்றும் | புதிய ஆட்சேர்ப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூப்பு அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் காரணமாக, அந்த உத்தியோகத்தர்கள் | சேவைத் தேவையைக் கண்டறிந்த பிறகு, நிதிப்பிரமாணம் 71 இன் படி தொடர்புடைய |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்ப நிலை தரத்திலான உத்தியோகத்தர்கள் முறையே 103 மற்றும் 01 எனுமாறு அங்கீகரிக்கப்பட்ட பதவிணியை விஞ்சி 109 மிகைகள் காணப்பட்டன. | பிரதேச செயலக அலுவலகங்களிலும், மாவட்ட செயலக அலுவலகங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை விட அதிகமாக பணியமர்த்தப்பட்டுள்ளனர். | பதவிகள் அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2001 இன் பிரகாரம் சேவை காலம் 5 வருடங்களை மிஞ்சிய உத்தியோகத்தர்களின் இடமாற்றத்திற்கு உள்ளாக்கப்பட வேண்டிய போதிலும், மாவட்ட செயலகத்திலும் 13 பிரதேச செயலகங்களிலும் அலுவலகத்தில் உள்ள 59 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், 53 அமைத்துவ சேவை உத்தியோகத்தர்களும், 350 துறைகளுக்கு உரிய அதிவிருத்தி உத்தியோகத்தர்களும், 5 கிராம உத்தியோகத்தர்களும், 21 ஏனைய உத்தியோகத்தர்களும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றியவாறு உள்ளனர். | சேவை நிலையத்தில் 05 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குதல் பொருத்தமானது என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். | சுற்றறிக்கை விதிகளின்படி இடமாற்றங்கள் செய்யப்பட வேண்டும். |